Cr. Mis.39(Eng) 663697 – 11 – 2- 70

**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXV CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
III ADDL. DIST. COURT, TIRUVALLUR AT POONAMALLEE.

SESSIONS CASE NO.89/2022

Deposition of PW7

| | | | |
|---|---|---|---|
| Name | : Dr.Vani | Village | : |
| Father's / Husband's Name | : Kaliyappan | Calling | : |
| Age | : | Taluk | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on the 02nd day of December 2025.

(எதிரிகள் 1 முதல் 3 ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது ராஜீவ்காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 12.12.2020 அரசு திருவள்ளூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணியிலிருந்தபொழுது இரவு சுமார் 10.30 மணியளவில் நவீன் என்பவர் அசோக்குமார் என்பவரை அழைத்து வந்தார். அவர் தன்னை அசோக்குமாரின் சகோதரர் என்று கூறினார். வரும்பொழுதே அசோக்குமாருக்கு உயிர் இருந்ததற்கான அடையாளம் எதுவும் இல்லை. இடது மார்புக்கு கீழே ஒரு குத்துக் காயம் இருந்தது. அவர் இறந்ததை உறுதி செய்த பின்னர் அவரது உடலை பிணக்கூராய்வுக்காக பிணவறைக்கு அனுப்பி வைத்தேன். இது சம்மந்தமாக நான் பதிவு செய்த விபத்து பதிவேட்டு அறிக்கையின் நகல் **அ.த.சா.9**. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்துக் கொண்டார்.

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சட்டம் சார்ந்த மருத்துவ ரீதியலான வழக்கு என்பதால் நான் போலிசுக்கு தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் இரவு 10.30 மணிக்கு சிகிச்சைக்காக வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சட்டம் சார்ந்த

மருத்துவ ரீதியலான வழக்கில் காயங்கள் எங்கு எப்படி ஏற்பட்டது என்று குறிப்பிடுவது வழக்கம். இந்த வழக்கில் அப்படி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு வந்தவர்கள் சொல்லியிருந்தால் குறிப்பிட்டிருப்பேன். அ.த.சா.ஆ.9 ஆவணத்தில் left என்னும் எழுத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் right என்று எழுதப்பட்டு பின்பு தெரியவந்ததால் left என்று எழுதப்பட்டது.

**மறுவிசாரணை இல்லை.**